ORIGINAL ARTICLE

# திருநாவுக்கரசர் தேவாரத்தில் இயற்கை
## [THIRUNAVUKKARASAR THEVARATTHIL IYARKAI]

## NATURE IN THIRUNAVAKKARASAR'S THEVARAM

ஜீவா நாதன்[1]/ Jiva Nathan[1]

[1]பண்டார் , அலாம் இடைநிலைப்பள்ளி, மாசாய், ஜொகூர், மலேசியா. / Bandar Sri Alam Secondary School, Masai, Johor, Malaysia. *மின்னஞ்சல்* / Email: jiva2103@gmail.com

**ஆய்வுச் சாரம்**

*திருநாவுக்கரசர் தேவாரத்தில் இயற்கையை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். திருநாவுக்கரசரின் தேவாரத்தில் இயற்கை அழகினை இம்மானுவேல் காண்ட் அவர்களின் அழகியல் கோட்பாடு அடிப்படையில் ஆராயப்பட்டது. தேவாரப்பாடல்களில் அடியார்கள் இறைவனை, ஐம்பூத வடிவிலும் ஐம்பூதங்களில் கலந்திருப்பதாகவும் பல இடங்களில் பாடியுள்ளனர். இதற்குக் காரணம் உயிரினங்கள் ஒவ்வொன்றிற்கும் ஐம்பூதங்களிலிருந்து கிடைக்கும் சூரியஒளி, நீர், காற்று முதலியன தேவைப்படுகின்றன. இயல்பாக இயற்கைக்கும் உயிரினங்களுக்கும் இடையே ஒரு தொடர்பு நிகழ்கின்றதைத் திருநாவுக்கரசர் தமது திருமுறைகளில் உணர்த்தியுள்ளார். இதன் அடிப்படையில் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இயற்கை என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையிலிருந்து 42 பதிகங்களும் இம்மானுவேல் காண்டின் அழகியல் கோட்பாடும் இவ்வாய்வின் முதன்மை ஆதரங்கள் ஆகும். திருத்தலங்களில் சூழ்ந்திருக்கும் இயற்கை வளம், வடிவம், நிகழ்வுகள், காட்சிகள் அனைத்தையும் திருநாவுக்கரசர் தமது பாடல்களில் உணர்த்தியுள்ளார். திருத்தலங்களைச் சூழ்ந்திருக்கும், நதி, வயல் வெளிகள், பல வகையான பழ மரங்கள், வளமான சோலைகள், பல் வகை பறவை இனங்கள், நாள் தோறும் பூக்கும் தாமரை, ஓடைகளில் மீன்களின் ஆரவாரம் போன்ற நிகழ்வுகளையும் அவர் வருணித்துள்ளார். இதன்வழி திருநாவுக்கரசர் தேவாரத்தில் இயற்கை அழகினை வர்ணிக்கும் பாடல்களுல் அதிகம் இடம்பெற்றுள்ளன என்பது நன்கு தெளிவாகின்றது.*

***கருச்சொற்கள்:* திருநாவுக்கரசர், அழகியல் கோட்பாடு, இயற்கை, இம்மானுவேல் காண்ட், தேவாரப்பாடல்**

**Abstract**

This study aimed to analyzes representation of nature in Thirunavukkarasar's thevaram (songs). The songs were analysed based on Immanual Kant's Esthetic Theory. Thevaram states that devotees of Shiva sang about God who dissolved Himself into five elements of nature. It also states that all living things need necessities such as sunlight, air, water from these five elements to

be alive. Thirunavukkarasar also state in Thevaram that there is a relationship between nature and living things. 42 *pathikam* in 4th volume from Thirunavukkarasar's songs and Immanuel Kant's esthetic theory was used as the primary source of the research. The finding shows that Thirunavukkarasar songs portray the esthetics and beauty of nature surrounding Lord Shiva's temples, rivers and paddy fields. It can be seen that the appearance and necessity of nature were constantly emphasized in his songs.

**Keywords:** Thirunavukkarasar, Esthetic theory, nature, Immanual Kant, Thevaram songs

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 15th January 2018, revised 30th March 2018, accepted 01th June 2018

## முன்னுரை

*சிவமாகிய முழுமுதற்பொருளாகிய உலக உயிர்களுக்கு ஏற்பட்டுள்ள தொடர்பினை விளக்கும் சமயநெறியே சைவம் என்பர். சைவ சமயத்திற்கு உரிய நூல்களாக விளங்குவன பன்னிரு திருமுறைகளாகும். இதில் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளை அருளியவர் திருநாவுக்கரசர் ஆவார் (தேவி ராஜேஸ்வரி. சி, 2011)[1].*

*திருநாவுக்கரசரின் வாழ்க்கை, நிலையாமையால் அழைக்கழைக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர் (கல்யாண சுந்தரம், 2005)[2]. எனவே, அவர் பாடல்களில் இறை உணர்வும் தத்துவமுமே மிகுதியாகக் காணப்படுகின்றன. இருப்பினும், சிவபெருமான் மீது கொண்ட அளவிலாப் பக்தியினாலும் காதலினாலும் சிவத்திருத்தலங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலின் தோற்றத்தைத் திருநாவுக்கரசர் எழிலுறப் வருணித்துப் பாடியுள்ளார் (கல்யாண சுந்தரம், 2005)[2].*

*திருநாவுக்கரசர் தேவாரத்தில் இயற்கை அழகியலை ஆராய்தலே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இவர் பாடிய நான்காம் திருமுறையில் இடம்பெற்றுள்ள திருக்கோயிலைச் சுற்றியுள்ள இயற்கை அழகியலை இவ்வாய்வு விளக்குகின்றது.*

## திருத்தலங்களில் இயற்கைச் சூழல்

*நாயன்மார்கள் வாழ்ந்த காலம் செல்வச் செழிப்பும், இயற்கை வளமும் நிறைந்து விளங்கிய காலம். இவர்கள் வழிபட்டத் திருத்தலங்கள் யாவும் இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் அமைந்து இவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியைத் தோற்றுவித்த காலம். இவர்கள் பெற்ற மகிழ்ச்சியனுபவம் தேவாரப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன (கல்யாண சுந்தரம், 2005)[2].*

***நதி***

*திருநாவுக்கரசர் சிவபெருமான் பக்தியின் சிறப்பைப் பல திருத்தலங்களுக்குச் சென்று பாடல் வழி உணர்த்தியுள்ளார். இவர் செல்லும் பெரும்பாலான திருதலங்கள் இயற்கைக்கு உரிமையான நதிகளைக் கொண்ட தலங்களே எனக் கூறப்படுகின்றன. திருத்தலங்களில் காணப்படும் நதியின் அழகிய காட்சியைத் திருநாவுக்கரசர் பலவாறாகப் பாடலில் பாடியுள்ளார். நீர் வளம் நிறைந்த கெடிலயாற்றின் வடகரையிலுள்ள இறைவனைச் சுற்றி உள்ள இயற்கை வளங்களைத் திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார் (குருசாமி, 2012)[3].*

*திருவதிகை வீரட்டானம் எனும், திருத்தலத்தில் நதியின் அழகை,*

*ஆர்த்தார் புனலார் அதிகைக் கெடில*

*(திருமுறை 4 : 5)[4]*

*எனத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். இத்திருத்தலத்தைச் சூழ்ந்திருக்கும் நதியின் நீரோட்டத்தின் அழகை, திருநாவுக்கரசர் அலைவீசி ஆரவாரம் செய்யும் நீரினைக் கொண்ட நதி என வருணித்துள்ளார். திருநாவுக்கரசர் நதியின் நீரோட்டம்,*

*தாழும் கெடிலப் புனலும்*

*(திருமுறை 4 : 19)[4]*

*எனப் பாடியுள்ளார். திருவதிகை எனும் திருத்தலத்தில் நதியின் நீரோடத்தைத் திருநாவுக்கரசர் பள்ளத்தை நோக்கி நீரானது பாய்ந்து ஓடும் தன்மை உடைய நதி எனப் பாடியுள்ளார். இவ்வாறு வளமிகு நதியின் கரையில்,*

*மதுகரம் மிழற்ற மந்திகள்*
*கிழந்ததேன் நுகர்தரும் கெடில வாணரே*

*(திருமுறை 4 : 100)[4]*

*எனத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். அழகிய காட்சிகள் நிகழ்கின்ற ஓர் அரங்கமாக இந்நதி கரை திகழ்கின்றது என்றும் திருநாவுக்கரசர் வருணித்துள்ளார். இந்நதி கரையில் அடை கிழிந்து, அதிலிருந்து தேனானது ஒழுகும் அற்புதக் காட்சியும், பெண்குரங்குகளோ அத்தேனைப் பருகவும், வண்டுகளோ கூட்டமாக 'ரீங்காரம்' செய்யும் ஒலியும் உடைய அற்புதங்கள் நிகழும் ஒரு உறைவிடமாகத் திருநாவுக்கரசர் சித்தரித்துள்ளார். இவ்வாறாகத் திருநாவுக்கரசர் தான் சென்ற திருத்தலங்களைச் சுற்றியுள்ள நதிகளையும் நதிகளில் நிகழும் காட்சிகளையும் தம் தேவாரத்தில் வருணித்துள்ளார்.*

**வயல் வெளிகள்**

*தமிழ்நாட்டில் உள்ள பாடல்பெற்றத் திருக்கோயில்கள் யாவும் வயல்கள் சூழப் பெற்று எப்போதும் பசுமையுடன் காணப்படும். திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கும் அடியவர்தம் மனமும் குளிர்ச்சியாக இருப்பதற்காக இருந்திருக்கும். இயற்கையோடு*

இயைந்த இறைவழிபாட்டினராக அருளாளர்களும் இறையன்பர்களும் விளங்கினர் என்பது பெறப்படும் (கல்யாண சுந்தரம், 2005)[2].

திருவதிகை வீரட்டானம் எனும் நகரில் வயல் வெளிகள் நிறைந்து காணப்பட்டுள்ளதைத் திருநாவுக்கரசர் தமது பாடல்களில் வருணித்துள்ளார். இதனை,

வரிவரால் உகளும் தெண்ணீர்க்
கழனிசூழ் பழன வேலி
அரிவரால் வயல்கள் சூழ்ந்த
(திருமுறை 4 : 273)[4]

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. திருவதிகை வயல்களில் ஓடும் நீரில் கோடுகள் உடைய வரால்மீன்கள் துள்ளிக் குதிப்பதும், வயலில் நெல் அரிவோர் நிறைந்து இருப்பதையும் கண்ட திருநாவுக்கரசர், வளமுடைய வயல், வேலி போல் திருவதிகையைச் சூழ்ந்திருக்கும் அழகியக் காட்சியினைத் தம் பாடலில் வருணித்துள்ளார்.

வயல்களில் இருக்கும் தென்னை மரங்களிலிருந்து தேங்காய்களானது கமுகு, வாழை, மா, மாதுளை ஆகிய மரங்களில் கொத்துக் கொத்தாகக் காய்திருக்கும் கனிகள் மேல் விழ, அவை உடைந்து வயல் நீரில் சிதறுவதால் அந்நீரானது தீங்கனிகளின் இனிய சுவையைப் பெறுகின்றது. இந்தக் காட்சிகளை நன்கு கண்ணுற்றத் திருநாவுக்கரசர் உலகுக்கு எடுத்துணரும் பொருட்டு,

ஓங்குதெங்கிலை யார்கமுகிள வாழைமாவொடு மாது ளம்பல
தீங்கனி சிதறந் திருவாரூ ரம்மானே
(திருமுறை 4 : 201)[4]

என வருணித்துள்ளார். திருவாரூர் வயல் வரப்புகளில் உள்ள பொந்துகளில் தன் இணையைத் தேடி ஆண் நண்டுகளும் அலைந்து திரியும் காட்சிகளையும் இயற்கை வளம் செறிந்த சூழலுக்கு நடுவில் சிவபெருமான் திருக்கோவில் அமைந்து இருப்பதால், குளிர்ச்சியும் மணமும் நிறைந்து காணப்படுவதைத் திருநாவுக்கரசர்,

அளைப்பிரிந்த வலவன்போய்ப்புகுதந்தகாலமுங் கண்டு தன்பெடை
திளைக்குந் தண்கழனித் திருவாரூ ரம்மானே
(திருமுறை 4 : 206)[4]

என வருணித்துள்ளார். திருஇடைமருதூர் எனும் திருத்தலத்தைச் சுற்றி, காவிரியின் தென்கரையிலும் வளமான வயல் வெளிகள் இருப்பதையும் திருநாவுக்கரசர் தமது பாடல்களில் கூறியுள்ளார். இதனை,

பொன்னித் தென்பால்
ஏருடைக் கமலம் ஓங்கும்
இடைமருது இடம்கொண் டாரே
(திருமுறை 4 : 346)[4]

எனப் பாடியுள்ளார். இக்காவிரியின் தென்கரையில் அழகிய தாமரை மலர்கள் பூத்திருக்கும் ஓர் இடமாகவும் திருநாவுக்கரசர் சித்தரித்துள்ளார். இத்துணை இயற்கைச் சூழலில் தமது இருப்பிடமாகச் சிவபெருமான் கொண்டிருக்கின்றார் என வருணித்துள்ளார். இதுபோன்ற செழிப்பான வயல் வெளிகளையும், அதனைச் சுற்றிப் பூத்திருக்கும் பூவினங்கள், ஓடைகளில் துள்ளிக் குதிக்கும் மீன்கள், வயல் வெளிகளின் அருகே தென்னை மரம், போன்றவைகளை வருணிக்கும் பொருட்டுத் திருநாவுக்கரசர் தமது பாடலைப் பாடியுள்ளார்.

**சோலைகள்**

சோலைகளைப் பாடுதல் தமிழ் இலக்கிய மரபாகும். இதில் இயற்கை வருணனை இடம்பெற்றுப் படிப்போரை, அழகியல் நெறிக்கு ஆட்படுத்துகின்றது. இத்தகைய மரபு பக்தி இலக்கியகளிலும் பேணப்பட்டுள்ளன. சோலை என்பதற்கு, 'மரச்செறிவு', 'தோப்பு' என்ற விளக்கத்தினைத் தமிழ் அகராதி தருகின்றது. தேவார அடியார்கள் சோலைகளின் காட்சியைத் தங்கள் திருமுறைகளில் குறிப்பிடுவதை வருணனையாக அமைகின்றது (கமலம், 2012)[5].

சோலைகளில் பல்வேறு மலர்கள் நிரம்பியதாகவும், பசுமையான செடி கொடிகள் மிக்கதாகவும் காணப்படும். திருநாவுக்கரசர் தமது பாடல்களில் பல திருத்தலங்களுக்குச் சென்று சோலைகளின் காட்சியைச் சித்தரித்துள்ளார். திருவதிகையில் சூழ்ந்திருக்கும் சோலைகள் பற்றின பல வருணனைகளையும் பாடியுள்ளார். இதனை,

வளர்பொழில் வீரட்டம் சூழ்ந்து

(திருமுறை 4 : 20)[4]

எனத் திருநாவுக்கரசர் வீரட்டானம், வளர்கின்ற சோலைகளால் சூழப்பட்டுக் காணப்படுகிறது என வருணித்துள்ளார். சோலைகளில் வண்டுகள் 'ரீங்காரத்தின்' இசை ஒலிப்பதையும் உணர்ந்த திருநாவுக்கரசர்,

கோதிவண்டு அறையும் சோலை

(திருமுறை 4 : 476)[4]

எனப் பாடியுள்ளார். சோலைகளில் தேன் நிரம்பி பல வண்ணங்களில் பூத்திருக்கும் பூக்களைக் கிளறி ஒலி செய்யும் வண்டுகள் நிறைந்த சோலை என்றும் திருநாவுக்கரசர் வண்டுகளின் 'ரீங்காரம்' ஒலி அச்சோலை முழுவதும் இருப்பதையும் உணர்த்துகின்றார்.

திருக்கொடிகா எனும் திருத்தலத்திலும் நிழல் மிகுந்த சோலைகள் இருப்பதையும் திருநாவுக்கரசர்,

நிழல்உமிழ் சோலை சூழ
நீள்வரி வண்டு இனங்கள்
குழல்உமிழ் கீதம் பாடும்

(திருமுறை 4 : 494)[4]

எனப் பாடியுள்ளார். நீண்ட கோடுகளைக் கொண்ட வண்டு இனங்கள் சோலை முழுவதும் சுதந்திரம் நிறைந்து மகிழ்ச்சியோடு வலம் வரும். அச்சமயம் சோலை முழுவதும் புல்லாங்குழலில் இருந்து பிறக்கும் இன்னிசைப் பாடல் போல் வண்டுகளின் 'ரீங்காரம்' ஒலிக்கும் இனிமை நிறைந்த சூழ்நிலை சோலை முழுவதும் உருவாகும் என்பதனைத் திருநாவுக்கரசர் சித்தரித்துள்ளார். இவ்வாறு திருநாவுக்கரசர் தம் கண்களால் கண்டு மகிழ்ந்த சோலைகளில் நிகழும் காட்சிகளை வருணித்துள்ளார்.

**மரங்கள்**

மரங்கள் இயற்கைகளின் இயக்கத்திற்குத் துணைநின்று, உயிரினங்களுக்கு எண்ணற்றச் சேவைகளைச் செய்து தருகின்றன. மரங்களின் மெல்லிய வேர்கள் மண்ணுக்கடியில் சென்று நீர்மட்டத்திற்குள் இணைப்பை ஏற்படுத்துகின்றன. மரங்களின் உயரம், உருவம், இலைகள், மலர்கள், காய்கள், பழங்கள் ஆகியவற்றிற்குத் தகுந்தாற் போல் இவற்றின் பயன்கள் மாறுபடும் என்று அறிவியல் களஞ்சியம் கூறுவதாகக் கமலம் (2012)[5] எனும் ஆய்வாளர் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். குரா, கோங்கு, புன்னை, தென்னை, குரவம், வேங்கை, செண்பகம், மாமரம் போன்ற மரங்களை அடியார்கள் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

தென்னை மரங்கள் புல் இனத்தைச் சேர்ந்தவை. 'தென்னையும் பனையும் தோற்றத்தில் ஒன்றாக இருப்பதோடு, தேன் மயமான நீரைக் கொடுக்கின்றது. தன் குடுக்கைக்குள் தேனைச் சேகரித்து வைத்திருப்பதால் தேன் பனை என்னும் பெயர் உண்டானது. தேன் பனை என்பது மருவி தென்னை எனப் பெயர் பெற்றது' (கமலம், 2012)[5].

திருநாவுக்கரசர் சென்ற திருத்தலங்களில் தென்னை மரத்தின் காட்சியைச் சித்தரிக்கும் வகையில் பல பாடல்களைப் பாடியுள்ளார். இதனை,

தெருஎலாம் தெங்கும் மாவும்
(திருமுறை 4 : 529)[4]

எனத் தெருவெங்கும் தென்னை மரங்கள் இருப்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

திருக்கோவலூர் எனும் திருத்தலத்தில் குரா, கோங்கு போன்ற மரங்களும் அவ்வூரைச் சுற்றி இருப்பதையும் திருநாவுக்கரசர் தமது பாடலில் சுட்டிக்காட்டியுள்ளார். இதனை,

குரவொடு கோங்கு சூழ்ந்த
(திருமுறை 4 : 678)[4]

எனத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். குரா எனப்படும் சுரைக்காய் போன்ற மரம், கோங்க மரங்களும் திருக்கோவலூர் எனும் திருத்தலத்தில் சூழ்ந்திருப்பதையும் திருநாவுக்கரசர் விவரித்துள்ளார். திருநாவுக்கரசர் குரா மரத்தின் மணமும் கோங்க மரத்தின் மலரும் திருத்தலமெங்கும் இருப்பதையும் வருணித்துள்ளார். திருநனிபள்ளி எனும் திருத்தலத்தைச் சுற்றிலும் பல வகையான மரங்கள் இருந்துள்ளதையும் திருநாவுக்கரசர்"

செண்பகம் திகழும் புன்னை
செழுந்திரள் குரவம் வேங்கை
நண்புசெய் சோலை சூழ்ந்த
நனிபள்ளி அடிக ளாரே

(திருமுறை 4 : 681)[4]

எனப் பாடியுள்ளர். இத்தலம் செண்பகம், புன்னை, குரவம், வேங்கை முதலிய பயன் தரும் மரங்களைச் சூழ்ந்திருக்கும் தலமாக விளங்குகின்றது. நறுமணம் உடைய பூக்களைக் கொண்ட செண்பகம் மரமும், வெள்ளை நிற பூக்களையும் மஞ்சள் நிற பூந்தூளையும் கொண்ட புன்னை மரம் இருப்பதையும் திருநாவுக்கரசர் கூறியுள்ளார். இம்மரங்களின் மலர்கள் காற்றில் உதிரும் அழகையும் திருநாவுக்கரசர் அழகியல் உணர்வோடு பாடியுள்ளார். இதுபோன்ற மரங்கள் சூழ்ந்திருக்கும் தலத்திலே சிவபெருமான் இருப்பதையும் திருநாவுக்கரசர் கூறுகின்றார். இவ்வாறு திருநாவுக்கரசர் சிவதிருத்தலங்களில் சூழ்ந்துள்ள குரா, கோங்கை, மாமரம், புன்னை, செண்பகம், குரவம் வேங்கை ஆகிய மரங்களின் அழகை வருணித்துள்ளார்.

**தாமரை**

மலர்களில் சிறந்தது தாமரை மலராகும். தாமரை மருத நிலத்தின் சிறந்த மலராகக் கருதப்படுகிறது. இறையனார் களவியலுரை, தாமரையை மருத நிலத்து மலராகக் குறிப்பிட்டுள்ளார். தாமரை மலர் குளம், குட்டை, பொய்கை முதலிய நன்னீர் நிலைகளில் வளரும் தன்மை உடையது. சேற்றில் வேர்விட்டு நீரின் நிலையை ஒட்டி, இதன் கொடி வளரும். சிவப்பு, வெண்மை நிறத்தில் தாமரை மலரும். திருமகள் வீற்றிருப்பதால் இம்மலர், 'பூ எனப்படுவது பொறிவாழ் பூவே' எனச் சிறப்பிக்கப்படுகின்றது (கமலம், 2012)[5].

திருநாவுக்கரசர் திருவதிகையில் பல நாட்கள் தங்கி பல பதிகங்கள் பாடி சிவபெருமானை வழிபட்டார். தமது பாடல்களில் தாமரை மலரைப் பற்றின வருணனைகளையும் பாடியுள்ளார். தாமரை மலரானது தேன் நிரம்பிய மலர் என்பதனை,

ஈண்டுநீர்க் கமலவாய் மேதி பாய்தரக்
கீண்டுதேன் சொரிதரும் கெடில வாணரே

(திருமுறை 4 : 103)[4]

திருநாவுக்கரசர் பாடியுள்ளார். நீர் நிரம்பிய ஒரு குளத்தில் தேன் நிரம்பிய அழகிய தாமரை பூத்திருந்தது. அச்சமயம் அந்தக் குளத்தில் ஓர் எருமையானது பாய்ந்து தாமரையின் இதழ்கள் கிழிந்து போக, பூவில் இருக்கும் தேனானது குளத்து நீரில் கலந்துவிடுகின்றது. இவ்வாறு தேன் கலந்த வளமான நீரினைக் கொண்டுள்ள தலத்திலே சிவபெருமான் வீற்றிருக்கின்றார் எனத் திருநாவுக்கரசர் சித்தரிக்கின்றார்.

திருநல்லூர் எனும் திருத்தலத்தில் சிவபெருமானை வழிபட சென்ற திருநாவுக்கரசர், அத்தலத்தின் அருகே இருந்த தாமரை மலர்கள் மலர்ந்திருந்த குளத்தைக் கண்டு,

நாள்கொண்ட தாமரை பூத்தடம்
சூழ்ந்தநல் லூர்அகத்தே
(திருமுறை 4 : 939)[4]

எனப் பாடியுள்ளார். இப்பாடல் வரியில் தாமரை மலர் தன்மையின் சிறப்பைக் கூறியுள்ளார். தாமரை மலரானது தினந்தோறும் பூக்கும் தன்மை உடையது எனப் பாடலில் உணர்த்துகின்றார். இரவில் தாமரை தனது இதழ்களை மூடிக்கொண்டும் காலையில் சூரிய ஒளி இதழ்களின் மேல் பட்டவுடன் இதழ் விரிந்து அழகிய மலராகக் காட்சி அளிக்கும் தோற்றத்தை வருணித்துள்ளார். இவ்வாறான தன்மையைக் கொண்ட தாமரை மலர்கள் பூத்திருந்த திருத்தலத்தில் திருநாவுக்கரசர், சிவபெருமானை வழிபட்டுப் பாடல் பாடினார்.

## முடிவுரை

திருத்தலங்களில் சூழ்ந்திருக்கும் இயற்கை வளம், வடிவம், நிகழ்வுகள், காட்சிகள் அனைத்தையும் திருநாவுக்கரசர் தமது கவிப்புலமையால் தம் பாடல்களில் உணர்த்தியுள்ளார். திருத்தலங்களைச் சூழ்ந்திருக்கும், நதி, வயல் வெளிகள், பல வகையான பழ மரங்கள், வளமான சோலைகள், பல் வகை பறவை இனங்கள், நாள் தோறும் பூக்கும் தாமரை, ஓடைகளில் மீன்களின் ஆரவாரம் போன்ற நிகழ்வுகளையும் காட்சிகளையும் எளிமையான நடையில் மனதில் பதியும் வகையில் வருணித்துள்ளார் திருநாவுக்கரசர்.

திருத்தலங்களைச் சுற்றி வேலி போல் இயற்கை வளங்கள் சூழ்ந்திருப்பதையும் கண்டு மகிழ்ந்து, திருநாவுக்கரசர் தமது புலன் இன்பத்தை வருணித்துப் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சிவபெருமானின் மேன்மையையும் சைவ சமயத்தின் சிறப்பையும் அடியார்களின் மனதில் ஆழப் பதிய வைக்கும் நோக்கில் திருத்தலங்களைச் சுற்றி இருக்கும் இயற்கை வளங்களை வருணிக்கும் முறையில் பாடல்களைப் பாடியுள்ளார். திருநாவுக்கரசர் தேவாரத்தில் திருத்தலங்களைச் சுற்றிலும் இயற்கை வளங்கள் சூழ்ந்துள்ளதையும் அதனை வருணித்துள்ளதையும் அவரின் பாடல்களில் அறிய முடிகிறது.

## மேற்கோள் நூல்கள்


1. Devi Rajeswari, S. (2011). *Thirunavukarasar life thought in Fourth Thieumurai (நான்காம் திருமுறையில் திருநாவுக்கரசர் உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்0.* Panniruththirumurai Research Book.
2. Kalyanasuntharam, J. (2005). *Thirunavukarasar's Devotion (திருநாவுக்கரசரின் இறைநெறி)*. Madurai: Madurai Kamaraj University.
3. Gurusamy, S. (2012). *Nature in Literature (இலக்கியங்களில் இயற்கை)*. Chennai: Arivu Publications.
4. Sivanyanam, V. (2015). *Thirunavukarasar Devaram – Part I (திருநாவுக்கரசர் தேவாரம் - முதல் பகுதி)*. Coimbatore: Vijaya Publications.

5. Kamalam, A. (2012). *Environment Situation in Devaram (தேவாரத்தில் சுற்றுப்புறச்சூழியல்)*. Madurai: Madurai Kamaraj University.

***Citation in Tamil***
ஜீவா நாதன். (2018). திருநாவுக்கரசர் தேவாரத்தில் இயற்கை. *மூவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதல், 2*(3), 204-212.

***Citation in Tamil @ Romanised***
Jiva Nathan. (2018). Thirunavukkarasar thevaratthil iyarkai. *Muallim Journal of Social Sciences and Humanities*, *2*(3), 204-212.

***Citation in English***
Jiva Nathan. (2018). Nature in Thirunavakkarasar's thevaram. *Muallim Journal of Social Sciences and Humanities*, 2(3), 204-212.